1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1972-ம் ஆண்டு, மதுரை மாவட்டம், வைகை அணைக்கருகில் நைலான்—6 துணி நூலிழை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை டிட்கோ நிறுவ உத்தேசித்திருந்தது. ஆயினும் இத்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான அனுமதியை மத்திய அரசிடம் பெற முடியாததால் இதை செயல்படுத்த இயலவில்லை.

மின்சார உற்பத்தி மீது வரி.

*வினா எண் 582-திரு. என். பிட்டப்பா ; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு யளிப்பாரா—

(அ) மின்சார உற்பத்தி மீது மத்திய அரசு அண்மையில் விதித்த (எக்சைஸ் லெவி) வரியை குறித்து முற்றிலும் மறு பரிசீலனை செய்திடக் கோரி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய மேல் நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஆயத் தீர்வை விதிப்பின் மூலமாக பெறும் தொகையை திரும்ப மாநில அரசுக்குக் கொடுப்பதாகவும் இம்முடிவு 1979-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து செயல்படும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இது குறித்த முடிவு 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தி இவ்வரசு மத்திய அரசுடன் கடித தொடர்பு கொண்டுள்ளது.

சேத்தூரில் உப மின் நிலையம்.

*வினா எண் 583 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தூரில் 66 . K.V. உப மின் நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) இல்லையென்ல், தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்துவிட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.